(ஆ) உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு தள்ளிவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, கவன ஈர்ப்பு தள்ளிவைக்கப்படுகிறது.*

5. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே.எஸ். தென்னரசு.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது மற்றும் பதினைந்தாவது அறிக்கைகளை குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும் – *தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

(ஆ) கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுது பொருள் மற்றும் அச்சு

(இ) கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை

(ஈ) கோரிக்கை எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரித் துறை - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*